## எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டின்

# உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஆட்சி; ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரையில் உறுதி!



சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முழுக்க அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழ்நாடு தலைகுனியாது பார்ப்புரையானது நடைபெற்று வருகிறது.

பரப்புரை தொடங்கிய 23 நாட்களில் இதுவரை 161 தொகுதிகளில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது. 23.02.26 அன்று 9 சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

வீரபாண்டியில் சி.வி.எழிலரசன் , பெரம்பூரில் கலாநிதி வீராசாமி, சோழிங்கநல்லூரில் ஜெகத்ரட்சகன், குடியாத்தத்தில் கம்பம் செல்வேந்திரன், கலசப்பாக்கத்தில் எழிலன் நாகநாதன், சேந்தமங்கலத்தில் தயாநிதி மாறன், வாணியம்பாடியில் ஆர்.எஸ்.பாரதி, பொள்ளாச்சியில் கார்த்திகேய சிவசேனாபதி, அம்பாசமுத்திரத்தில் மனோஜ் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

பொள்ளாச்சியில் பேசிய கார்த்திகேய சிவசேனாபதி, “இன்று ‘எம்.ஜி.ஆர். ஆட்சி, ஜெயலலிதா ஆட்சி’ தருவதாக சொல்லிக் கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமியின் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் பட்ட கஷ்டங்கள் ஏராளம் என சொல்லி கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பட்டியலிட்டவர், அப்படிப்பட்ட மோசமான நிர்வாகம் ஒருபக்கம், கொரோனா பெருந்தொற்று மறுபக்கம் என்ற சூழலில் ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் அவர்கள் வீழ்ச்சியில் இருந்த தமிழ்நாட்டை மீட்டெடுத்துள்ளார் என எடுத்துரைத்தார். அதோடு ‘திராவிட மாடல்’ ஆட்சியினால்தான், இந்தியாவிலேயே தமிழ்நாடு 11.19% என்ற உச்சபட்ச வளர்ச்சி அடைந்து சாதனை படைத்துள்ளது.’ என குறிப்பிட்டார் “ நமது பிள்ளைகளின் கல்வியும், மாநிலத்தின் பொருளாதாரமும் இன்னும் வளர வேண்டும் என்றால், ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர வேண்டும். தமிழ்நாட்டின் உரிமைகளை எவரிடமும் விட்டுக் கொடுக்காத இந்த அரசை, 2026ல் மீண்டும் அரியணையில் ஏற்ற வேண்டும்” என கேட்டுக்கொண்டர்.

எழிலன் நாகநாதன் பேசுகையில் “இந்த 5 ஆண்டுகளில் மட்டும் 100 மேம்பாலங்களைக் கட்டி முடித்துள்ளோம். கல்வி, விவசாயம், மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் இன்று தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. ஒரு காலத்தில் பெண்கள் எங்காவது செல்ல வேண்டுமென்றால் கணவரிடமோ, மற்றவர்களிடமோ பேருந்து செலவுக்குப் பணம் கேட்கும் நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, இன்று பெண்கள் யாரிடமும் கையேந்தாமல் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் தன்னம்பிக்கையை இந்த அரசு தந்துள்ளது. அதோடு இந்தியாவிலேயே விவசாயிகளுக்காகத் தனி பட்ஜெட் தாக்கல் செய்த ஒரே அரசும் நமது திராவிட மாடல் அரசுதான்.” என பெருமிதத்தோடு தெரிவித்தார்.

தயாநிதி மாறன் அவர்கள் பேசுகையில் “கடந்த அ.தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டின் உரிமைகளை அடமானம் வைத்த ஆட்சியாக இருந்தது, ஆனால் தற்போது எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி உள்ளது” என தெரிவித்தார். மேலும் பேசிய அவர் “பெண்களின் வங்கி கணக்கில் ரூ.5,000 நேரடியாக வரவு வைக்கப்பட்டது சமூகநீதி சார்ந்த முக்கிய நடவடிக்கை எனவும் பெண்கள் முன்னேற்றத்தின் மிக முக்கிய அம்சம் இது” எனவும் குறிப்பிட்டார்.

ஜெகத்ரட்சகன் அவர்கள் “ தமிழநாட்டில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை கொண்டு வந்து சமூக நீதியை நிலை நாட்டியவர் நமது முதலமைச்சர் அவர்கள் எனவும், காலை உணவுத் திட்டம், தூய்மை பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்குதல் போன்ற நலத்திட்டங்களின் பயன் பற்றி எடுத்துரைத்தார். “தாய் தந்தையை இழந்த குழந்தைகளுக்கு 2000 ரூபாய் வழங்கும் திட்டதை பற்றி மனமார புகழ்ந்து பேசினார். காலனி என்ற சொல்லின் மூலம் இன்னும் சாதிய அவமதிப்பு இருக்க கூடாது என்பதற்காக, காலனி என்ற பெயரை நீக்கும் சட்டத்தை கொண்டு வந்து சமூக நீதி காத்த அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது என பேசினார்.

அனைத்து இடங்களிலும் பெண்களும், இளைஞர்களும் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.


ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்...



மார்ச் 2026 1 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின்

73-வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக...

தூய்மைப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் (TANK OPERATORS), மக்கள் நலப் பணியாளர்கள், புதுவாழ்வுத் திட்ட பணியாளர்கள் (மகளிர் திட்டம்), MGNREGS (100 நாள் வேலைத் திட்டம்), பணித்தளப் பொறுப்பாளர்கள் என...

1374 களப்பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

27.02.2026 பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி

காலை: 10.00 பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் நரசுஸ் திருமண மண்டபம்

மதியம்: 12.00 கடத்தூர் ஒன்றியம் MCS மஹால் கடத்தூர்

மாலை: 3.00 தருமபுரி ஒன்றியம் RPRS மஹால் செட்டிக்கரை

இங்கனம்:-

மாண்புமிகு. எ.வ.வேலு
பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர்

மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்

முனைவர். பி.பழனியப்பன்
மாவட்ட கழக செயலாளர், மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்

தருமபுரி மேற்கு மாவட்ட திமுக